# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 2 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1981, செத்தெம்பர் மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.30 தபாற் செலவு : சதம் 75

**1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டம்**

*[1981, செத்தெம்பர் மாதம் 2 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 42/80

1421

**தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கெனவும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கெனவும் ஆனதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க, தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று (இது, இச்சட்டத்தில் " நியமித்த தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையத்தைத் தாபித்தல்.**

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, தேசிய நீர்வாழ் வள ஆராய்ச்சி, அபிவிருத்தி முகவர் நிலையம் (இது, இதனகத்துப்பின்னர் "முகவர் நிலையம் " எனக் குறிப்பீடு செய்யப்படும்) தாபிக்கப்படுதல் வேண்டும் ; அது, நீர்வாழ் வள விடயத்தில் ஆராய்ச்சி, அபிவிருத்தி, முகாமை நடவடிக்கைகளை நடாத்தும், இணைக்கும் பொறுப்பு அளிக்கப்பட்ட தலையாய தேசிய நிறுவனமாதல் வேண்டும்.

**முகவர் நிலையமானது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக இருத்தல்.**

3. முகவர் நிலையமானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயர்கொண்டு, இடையறு வழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் ; அத்துடன், அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடரலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம்.

**முகவர் நிலையத்தின் குறிக்கோள்களும் பணிகளும்.**

4. முகவர் நிலையத்தின் குறிக்கோள்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) நீர்வாழ் வள விடயத்தில் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக அறிவியல், தொழினுட்பவியல் நிபுணத்துவ அறிவைக் கையாளுதலையும் பயன்படுத்துதலையும் உறுதிப்படுத்துதல் ;

(ஆ) நீர்வாழ் வளங்களை இனங்காணல், கணித்தல், முகாமை செய்தல், அத்துடன் அபிவிருத்தி செய்தல் ஆகிய துறைகளிலும் அத்துடன், குறிப்பாகப் பின்வரும் துறைகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்து நடாத்துதல் :—

(i) சமுத்திரவியல் ;

(ii) மீன்பிடிக்கலம், மீன்பிடி உபகரணங்கள், சாதனங்கள், மீன்பிடி முறைகள் ஆகியவற்றைச் சீர்படுத்துதலும், அபிவிருத்தி செய்தலும் ;

(iii) மீனவர்களதும் அவர்களில் தங்கிவாழுநர்களினதும் நலன் உட்பட, மீன்பிடித்தொழிலின் சமூக, பொருளாதார அம்சங்கள் ;

2—ஏ 57702—6,475 (81/07)

(iv) மீனையும் அதனோடு தொடர்புபட்ட உற்பத்திப்பொருட்களை யும் பதனிடுதல், பதங்காத்தல், அத்துடன் சந்தைப்படுத் துதல் ;

(v) உள்ளூர் நீர்ப்பரப்புகள், கரையோர ஈரலிப்பு நிலங்கள், கடற்கரைக்கப்பாலான நீர்ப்பரப்புகள் போன்றவைகளில் நீர்வாழ் வளங்களை அபிவிருத்தி செய்தல், முகாமை செய் தல், அத்துடன் பேணிக்காத்தல் ;

(இ) நீர்வாழ் வளங்களை நாடித்தேடுதல், முகாமைசெய்தல், அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான அறிவியல், தொழினுட்பவி யல், சட்ட விடயங்களில் மதியுரை, மற்றும் ஆலோசனைச் சேவைகளை ஏற்பாடுசெய்தல் ;

(ஈ) நீர்வாழ் வளங்களை நாடித்தேடுதல், திட்டமிடல், ஆராய்ச்சி செய் தல், அபிவிருத்தி செய்தல், கட்டுப்படுத்துதல், முகாமை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நடவடிக்கைகளை இணைத்தல் ;

(உ) இலங்கையில், நீர்வாழ் வளங்களினதும் மீன்பிடித் தொழிலினதும் அபிவிருத்திக்குப் பயனுள்ள தகவல்களையும் தரவுகளையும் சேக ரித்தல், பரப்புதல், வெளியிடுதல் ஆகியவற்றை மேற்கொள்ளு தல் ;

(ஊ) முகவர்நிலைய வேலையை நடாத்த அல்லது அதற்கு உதவ அவசியத் தேவைப்படும் ஆட்களுக்கான பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்; அத்துடன்

(எ) இச்சட்டத்தின் கீழ் முகவர் நிலையத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட தத்துவங்கள், பணிகள், கடமைகள் எல்லாவற்றையும் பிரயோகித்தலும், நிறைவேற்றுதலும், புரித லும்.

முகவர் நிலை யத்தின் தத்து வங்களும் கட மைகளும்.

5. முகவர் நிலையத்திற்கு—

(அ) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எத்தன் மைத்தான ஏதேனும் முறையில் கொள்ளுவதற்கும், வைத்திருப் பதற்கும், அத்துடன், ஏதேனும் அத்தகைய ஆதனத்தை விற் பதற்கும் அல்லது வேறு விதமாகக் கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) முகவர் நிலையம் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசிய மானவையெனக் கருதக்கூடிய அலுவலகங்கள், கட்டடங்கள், நிறுவுகைகள், ஆய்வுகூடங்கள், பொறித் தொகுதி, உபகரணம், வாகனங்கள், கலன்கள், வேறு சிறு மரக்கலங்கள் ஆகிய அத் தகைய வசதிகளை நிறுவிப் பேணுவதற்கும் ;

(இ) நீர்வாழ் வளங்களின் வர்த்தக ரீதியான பயன்பாட்டுக்கும் அபி விருத்திக்கும் அதன் நிபுணத்துவத்தைக் கையாளுவதற்கும் பயன்படுத்துவதற்கும் முகவர் நிலையம் அவசியமானதெனக் கருதக்கூடிய, விசாலிப்புச் சேவைகள் உட்பட, அத்தகைய நட வடிக்கைகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கும் ;

(ச) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூர் அதிகார சபைகள், பகிரங்கக் கூட்டுத் தாபனங்கள் என்பவற்றுடனும் வேறு ஆட்களுடனும் ஏதேனும் ஒப்பந்தத்தை அல்லது உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கும் ;

(ட) அதன் குறிக்கோள்களில் எவற்றையேனும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய நியதி, நிபந்தனைகளின்மீது கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கும் ;

(ண) முகவர் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எவையேனும் சேவைகளுக்காக அல்லது வசதிகளுக்காக கட்டணங்களை அறவிடுவதற்கும் ;

(எ) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன், பயிற்சிக்கான அளிப்புகள் உட்பட, வெளிநாட்டு அல்லது உள்ளூர் நன்கொடைகளையும், மானியக்கொடைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் நீர்வாழ் வளங்களின் முகாமை, அபிவிருத்தி என்பன தொடர்பான ஆராய்ச்சி, கற்கை, பயிற்சி போன்றவைகளுக்கு மானியக்கொடைகள் ஏற்பாடுசெய்வதற்கும் ;

(ஏ) முகவர் நிலையத்தின் ஆக்கவுரிமைகள், கைத்தொழில் வடிவமைப்புகள், பதிப்புரிமை, அத்துடன் வியாபாரக் குறிகள் என்பவற்றை பயன்படுத்துதல் தொடர்பான ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்வதற்கும் ;

(ஐ) ஆராய்ச்சி, தொழினுட்பவியல் சேவைகளை—

(i) அத்தகைய அமைச்சின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதை உறுதிப்படுத்தும் குறிக்கோளுடன், அப்போதைக்கு, கடற்றொழில் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சிற்கும் ; அத்துடன்

(ii) அமைச்சரின் கலந்தாலோசனையுடன் முகவர் நிலையம் உகந்ததெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில், வேறு ஏதேனும் அமைச்சின், அரசாங்கத் திணைக்களத்தின், அல்லது அதன் ஏதேனும் கிளையின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், அல்லது வேறு எவரேனும் ஆளின் வேண்டுகோளின் மீது,

நடாத்தி வழங்குவதற்கும் ;

(ஒ) ஏதேனும் அமைச்சுக்கும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கும் அல்லது அதன் ஏதேனும் கிளைக்கும் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்துக்கும் அல்லது வேறு எவரேனுமாளுக்கும்—

(i) இலங்கையின் நீர்வாழ் வளங்களைப் பேணிக்காத்தல், பயன்படுத்தல் உட்பட ஆராய்ச்சி, முகாமை, அபிவிருத்தி, ஒழுங்குபடுத்தல் என்பன மீதும், அத்துடன்

(ii) இலங்கையின் தேசிய நீர்வாழ் வளங்களை முகாமை செய்தல், அபிவிருத்தி செய்தல் என்பன தொடர்பான தேசியக் கொள்கைகளை வகுப்பதிலும்,

அறிவுரை வழங்குவதற்கும் விதப்புரைகளைச் செய்வதற்கும்;

(ஓ) நீர்வாழ் வள முகாமை, அபிவிருத்தி ஆராய்சித்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும், காலத்திற்குக் காலம் அத்தகைய திட்டத்தை மீளாய்வு செய்வதற்கும்;

(ஔ) இலங்கையின் தேசிய நீர்வாழ் வளங்களினதும், கடற் கரைக்கப் பாலான நீர்ப்பரப்புகளினதும் ஆய்வொன்றைத் தொடங்கி நடாத்துவதற்கும்;

(க) அந்த அமைச்சின் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதில் ஆட்சிச் சபையின் ஆலோசனையுடன், முகவர் நிலையத்திற்கு அமைச்சர் குறித்தொதுக்கக்கூடிய அத்தகைய எல்லாத் திட்டங்களையும் மேற்கொண்டு புரிவதற்கும்; அத்துடன்

(ங) அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடிய அத்தகைய எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும்,

தத்துவம் இருத்தல் வேண்டும்.

ஆட்சிச் சபையின் அமைப்பு.

6. (1) முகவர் நிலையத்தின் தத்துவங்களும் கடமைகளும்—

(அ) நீர்வாழ் வளங்களின் முகாமை, ஆராய்ச்சி அல்லது அபிவிருத்தித் துறையில் ஒவ்வொருவரும் பிரபல்யமடைந்துள்ளவர்களாய் அமைச்சரினால் நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்களையும் (இவர்கள் இதனகத்துப்பின்னர் "நியமன உறுப்பினர்கள்" என்று குறிப்பீடு செய்யப்படுவர்); அத்துடன்

(ஆ) (i) கடற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி;

(ii) கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்குப் பதவிவகிக்கும் ஆள் அல்லது அத்தகைய அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி;

(iii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் அல்லது அத்தகைய அமைச்சரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி; அத்துடன்

(iv) முகவர் நிலையத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி என்ற பதவியை அப்போதைக்கு வகிக்கும் ஆள்,

ஆகிய பதவிவழி உறுப்பினர்களேயும்,

கொண்ட ஆளுநர் சபையொன்றுக்கு (இதனகத்துப் பின்னர் "சபை" எனக்குறிப்பீடு செய்யப்படும்) உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) நியமன உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்புமூலம், பதவிதுறத்தல் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினுலன்றி, இரண்டு ஆண்டுக்காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதோடு, மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராக இருத்தலும் வேண்டும்.

(3) எவரேனும் நியமன உறுப்பினர் அவரது பதவிக்காலம் முடிவடைவதன்முன்னர் பதவியை வறிதாக்குமிடத்து, அவருடைய இடத்தில் வேருேர் ஆளே அவர் எவ்வுறுப்பினருக்குப் பின்வந்தாரோ அவ் உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலத்திற்குப் பதவி வகிப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

சபையின் தத்துவங்களும், கடமைகளும்.

7. (1) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது—

(அ) அதன் குறிக்கோள்களே எய்துவதற்காக முகவர் நிலையத்தின் கொள்கைகளே வகுக்கலாம்;

(ஆ) முகவர் நிலையத்தின் கடமைகளுள் எதனையும் புரியலாம்;

(இ) அதன் தத்துவங்களேயும், கடமைகளேயும், பணிகளேயும் முறையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாருன முகவர் நிலையத்தின் அத்தகைய பகுதிகளேயும், பிரிவுகளேயும், அமைச்சரின் அங்கீகாரத்துடன் தாபிக்கலாம்;

(ஈ) முகவர் நிலையப் பணியாட்டொகுதியினரை நியமிக்கலாம், பதவியிலிருந்து நீக்கலாம், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கலாம், அத்துடன் அவர்களின் கூலிகளேயும் வேதனுதிகளேயும் நிர்ணயிக்கலாம்;

(உ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகளேயும் நிபந்தனைகளேயும் தீர்மானிக்கலாம்;

(ஊ) பணியாட்டொகுதியினரினதும் அவர்களில் தங்கிவாழுநர்களினதும் நன்மைக்கெனச் சகாய நிதியமொன்றையும் நலன் புரித்திட்டங்களேயும் தாபிக்கலாம், அவற்றை ஒழுங்குபடுத்தலாம்; அத்துடன், அத்தகைய ஏதேனும் நிதியத்துக்கு அல்லது ஏதேனும் திட்டத்துக்கு உதவுதொகைகள் வழங்கலாம்;

(எ) முகவர் நிலையத்தை நிருவகிக்கலாம் என்பதுடன், அதன் அலுவல்களே முகாமையும் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்கள், எல்லாம் தொடர்பிலும் அல்லது ஏதாவதொரு விடயம் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

சபையின் தவிசாளர்.

8. (1) சபையின் தவிசாளர், சபையின் நியமன உறுப்பினர்களிலிருந்து அமைச்சரினுல் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) தவிசாளர், தவிசாளரென்ற பதவியை முன்னரே வறிதாக்கினுலன்றி, ஈராண்டுக் காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்; ஆனுல், அப்பதவிக்குத் திரும்பவும் நியமிக்கப்படுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாருயினும், தவிசாளர், அவருடைய பதவிக்காலம் முடிவடைவதன்முன்னர் தவிசாளராகப் பதவிவகிக்காதொழிகின்றவிடத்து, அமைச்சர், வேருெரு நியமன உறுப்பினரைத் தவிசாளராக நியமிக்கலாம்; அத்துடன் அவ்வாறு பின்னுறுபவர், தவிசாளரென்ற பதவியை முன்னரே வறிதாக்கினுலன்றி, அவர் எத் தவிசாளருக்குப் பின்னமர்ந்தாரோ அத் தவிசாளரினது பதவிக்காலத்தில் முடிவுருதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு தவிசாளராகப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகச் சபையின் தவிசாளர், அப்பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவிருந்தால், அமைச்சர் எவரேனும் நியமன உறுப்பினரை அவருடைய இடத்தில் பதிற்கடமையாற்றுவதற்கென நியமிக்கலாம்.

(4) தவிசாளர், அமைச்சருக்கு முகவரியிட்டு அவர் கைப்பட எழுதுவதன்மூலம் தவிசாளர் பதவியைத் துறக்கலாம்.

முகவர் நிலையத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி.

9. (1) அமைச்சரானவர், சபையினது விதப்புரையின்மீது, முகவர் நிலையத்தின் வேலை தொடர்பாகத் தகைமையுள்ள ஆளொருவரை, முகவர் நிலையப் பணிப்பாளர் தலைமையதிபதியாக (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதிக்கு நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினுல் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டுமென்பதோடு, சபையினது விதப்புரையின்மீது அமைச்சரினுல் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய சேவை நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்தவராக இருத்தலும் வேண்டும்.

(3) பணிப்பாளர் தலைமையதிபதி, சபையின் நிருவாகக் கடமைகளைப் புரிவதற்கும் சபையின் முடிவுகளை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் தலைமையதிபதி அவருக்குச் சபை கையளிக்கக்கூடிய அத்தகைய தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(5) நியமன உறுப்பினர்கள் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, சபையாக அமைவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

சபையின் நடவடிக்கைகள் முதலியன.

10. (1) சபையானது ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், சபையின் சிறப்புக் கூட்டமொன்று அல்லாத ஒவ்வொரு கூட்டம் பற்றியும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆகக்குறைந்தது ஏழு நாள் அறிவித்தல் எழுத்தில் கொடுத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவேண்டிய அலுவல்பற்றி அத்தகைய அறிவித்தலில் குறைத்துரைத்தலும் வேண்டும்.

(3) தவிசாளரானவர், சபையின் நான்கு உறுப்பினர்களினது வேண்டு கோளின்மீது, எழுத்தில் அவ்வாறு செய்யப்படத் தேவைப்படுத்தப் பட்டபின்பு ஏழு நாட்களுக்குள்ளாகச் சபையின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) தவிசாளரானவர், சபையின் அத்தகைய சிறப்புக்கூட்டம்பற்றி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஆகக்குறைந்தது இரண்டு நாள் அறிவித்தல் எழுத்தில் கொடுத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவேண்டிய அலுவல்பற்றி அத்தகைய அறிவித்தலில் குறித்துரைத்தலும் வேண்டும்.

(5) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(6) சபையின் எல்லா முடிவுகளும், இயலுமானவரை கருத்து ஒருமைப்பாட்டுடன் எடுக்கப்படல் வேண்டும்.

(7) கருத்து ஒருமைப்பாடு சாத்தியமற்றவிடத்து, அதன்மீதான முடிவு சபையின் அடுத்த கூட்டத்துக்கு ஒத்திவைக்கப்படுதல் வேண்டும். அக்கூட்டத்தில் அத்தகைய கருத்து ஒருமைப்பாடு சாத்தியமற்றவிடத்து, அதன்மீது வாக்களித்தலொன்று எடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பெரும்பான்மை வாக்கு மூலம் முடிவு எடுக்கப்படுதலும் வேண்டும். வாக்குகள் சமனாக இருக்குமிடத்து, தவிசாளருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(8) சபையின் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளும் குறிப்பேடொன்றில் பதியப்படுதல் வேண்டும்; அத்தகைய கூட்டக் குறிப்பு, சபையின் அடுத்த கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபை அதன் சொந்த நடவடிக்கை முறையைத் தீர்மானிக்கலாம்.

சபைக்கான செயலாளர்.

11. சபைக்குச் செயலாளரொருவர் இருத்தல் வேண்டும்; அவர் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தொழில் நியதி, நிபந்தனைகள் மீது சபையினால் நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையின் பொதுவான பணிப்புக்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தொழுகுதலும் வேண்டும்.

முகவர் நிலையத்தின் செயலகம்.

12. முகவர் நிலையத்தின் செயலகமொன்று இருத்தல் வேண்டும்; அது, பணிப்பாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின் கீழும் இருத்தல் வேண்டும்; அத்துடன், பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்குக் குறித்தொதுக்கப்படக்கூடிய அத்தகைய நிருவாகக் கடமைகளையும் வேறு கடமைகளையும் புரிதல் வேண்டும்.

தேசிய நீர்வாழ் வள முகாமைப் பேரவை.

13. (1) தேசிய நீர்வாழ்வள முகாமைப் பேரவையொன்று (இதனகத்துப் பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இருத்தல் வேண்டும்.

(2) பேரவையானது—

(அ) அமைச்சரினால் நியமிக்கப்படும் பின்வரும் உறுப்பினர்களையும் :—

(i) நீர்வாழ் வள முகாமையுடனும் அபிவிருத்தியுடனும் தொடர்புபட்ட துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட திறமையுடைய அல்லது நிபுணத்துவமுடைய அல்லது முகவர் நிலைய வேலையின் சில அம்சங்கள் தொடர்பாக வேறு வகையாகச் சிறப்பாகத் தகைமைபெற்றுள்ள ஆளாக ஒவ்வொருவரும் இருக்கும் ஆறு ஆட்கள் ;

(ii) கடல்சார் விளைபொருட்களின் பதனிடல் மற்றும் ஏற்றுமதிக் கைத்தொழிலிலிருந்துவரும் பிரதிநிதியொருவர் ;

(iii) மீன்பிடிக் கலன்கள், மீன்பிடி உபகரணங்கள் உற்பத்திக் கைத்தொழிலிலிருந்துவரும் பிரதிநிதியொருவர் ; அத்துடன்

(iv) நீர்வாழ் வளத்துடன் தொடர்புபட்ட துறையொன்றில் கற்பித்தலில் அல்லது ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள உயர் கல்வி நிறுவனமொன்றின் கல்விசார் பணியாட்டொகுதியிலிருந்துவரும் ஆளொருவர் ;

(ஆ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் :—

(i) சபையின் நியமன உறுப்பினர்கள் ;

(ii) மீன்பிடித்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் ;

(iii) பணிப்பாளர் தலைமையதிபதி ;

(iv) முகவர் நிலையத்தின் பகுதிகள், பிரிவுகள் ஒவ்வொன்றினதும் பணிப்பாளர் ;

(v) (அ) திட்டமிடல், நிகழ்ச்சிநிரல் தயாரித்தல் ;

(ஆ) விசாலித்தல், ஒழுங்குபடுத்துதல் ;

(இ) அபிவிருத்தி ;

(ஈ) கடற்றொழிலாளர்கள் நலன்புரி ;

(உ) உண்ணாட்டு மீன்பிடித்தொழில் ;

(ஊ) கரையோரப் பாதுகாப்பு ;

என்னும் விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள, மீன்பிடித் தொழில் அமைச்சின் பணிப்பாளர்கள் ;

(vi) இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ;

(vii) இலங்கை மீன்பிடித்தொழில் கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் ;

(viii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி ;

(ix) கைத்தொழில், அறிவியல் அலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவரது பிரதிநிதி ;

(x) பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

(xi) நீர்ப்பாசனம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

(xii) கப்பற்றொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

(xiii) வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

(xiv) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

(xv) வனவிலங்குப் பாதுகாப்பு என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர் அல்லது அத்தகைய அமைச்சரினல் பெயர் குறித்து நியமிக்கப்படும் அவருடைய பிரதிநிதி ;

கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பேரவையானது அவதானிகளாக அதன் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கு உரியவர்களென அது கருதக்கூடிய அத்தகைய வேறு ஆட்களை அதன் கூட்டங்களுக்கு வருமாறு அழைக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர் ஒவ்வொருவரும் இறப்புமூலம், பதவிதுறத்தல்மூலம், அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் முன்னரே பதவியை வறிதாக்கினலன்றி, ஈராண்டுக்காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் ; அத்துடன், அப்பதவிக்கு மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நிய மிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், அவரது பதவிக்காலம் முடிவடை வதன்முன்னர் பதவியை வறிதாக்குமிடத்து, அமைச்சர், அவருடைய இடத்தில் வேறோர் ஆளை, அவர் எந்த உறுப்பினருக்குப் பின்வந்தாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலத்திற் குப் பதவி வகிப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

பேரவையின் தத்துவங்களும், கடமைகளும்.

14. (அ) இலங்கையில் நீர்வாழ் வளங்களின் முகாமை, அபிவிருத்தி என்பன தொடர்பான கருமங்களில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதலும், விதப்புரைகள் வழங்குதலும்; அத்துடன்

(ஆ) வளங்களின் முகாமை, அபிவிருத்தி, ஆராய்ச்சித்திட்டங் களைத் தயாரித்தலும் அவற்றைத் தொடர்ச்சியான மீளாய் வில் வைத்திருத்தலும்,

பேரவையின் தத்துவங்களும் கடமைகளுமாதல் வேண்டும்.

பேரவைத் தவிசாளர்.

15. (1) மீன்பிடித்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாக வுள்ள அமைச்சரின் அமைச்சுக்கான செயலாளர், பேரவையின் பதவி வழித் தவிசாளராதல் வேண்டும்.

(2) பேரவையின் தவிசாளர், பேரவையின் ஒவ்வொரு கூட்டத்திலும் தலைமைதாங்குதல் வேண்டும். பேரவையின் ஏதேனும் கூட்டத்தில் தவிசா ளர் இல்லாதவிடத்து, அக்கூட்டத்திற்கு வருகைதந்த உறுப்பினர்கள் தம் முள் ஒருவரை அக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

பேரவையின் நடவடிக்கைகள் முதலியன.

16. (1) தவிசாளர், ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பேரவையின் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.

(2) தவிசாளரானவர், உறுப்பினர்களில் ஒவ்வொருவருக்கும் ஆகக் குறைந்தது பதினான்கு நாள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்ப தோடு, அத்தகைய கூட்டத்தில் கையாளப்பட வேண்டிய அலுவல்பற்றி அத்தகைய அறிவித்தலில் குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) தவிசாளரானவர், பேரவையின் பத்து உறுப்பினர்களினது வேண்டு கோளின் பேரில், எழுத்தில் அவ்வாறு செய்யப்படத் தேவைப்படுத்தப் பட்ட பின்பு ஏழு நாட்களுக்குள்ளாக பேரவையின் சிறப்புக் கூட்ட மொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

(4) தவிசாளரானவர், பேரவையின் அத்தகைய சிறப்புக்கூட்டம் பற்றி உறுப்பினர்களில் ஒவ்வொருவருக்கும் எழுத்தில் ஆகக் குறைந்தது இரண்டு நாள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டுமென்பதோடு, அத்தகைய கூட்டத்தில் கையாளப்படவேண்டிய அலுவல் பற்றி அத்தகைய அறிவித் தலில் குறித்துரைத்தலும் வேண்டும்.

(5) பேரவையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண் பதி னெட்டு உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(6) பேரவையின் எல்லா முடிபுகளும், இயலுமானவரை கருத்து ஒருமைப்பாட்டுடன் எடுக்கப்படல் வேண்டும்.

(7) கருத்து ஒருமைப்பாடு சாத்தியமற்றவிடத்து, அதன்மீதான முடிபு பேரவையின் அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டத்தில் அத்தகைய கருத்து ஒருமைப்பாடு சாத்தியமற்றவிடத்து, அதன்மீது வாக்களித்தலொன்று எடுக்கப்படுதல் வேண்டுமென்பதோடு முடிவொன்று பெரும்பான்மைவாக்கு மூலம் எடுக்கப்படுதலும் வேண்டும். வாக்குகள் சமனாக இருக்குமிடத்து தவிசாளருக்கு அறுதியிடும் வாக்கொன்று இருத்தல் வேண்டும்.

(8) பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளும் குறிப்பேடொன்றில் பதியப்படுதல் வேண்டும்; அத்தகைய கூட்டக் குறிப்பு பேரவையின் அடுத்த கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) இதனகத்து அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, பேரவை அதன் சொந்த நடவடிக்கைமுறையைத் தீர்மானிக்கலாம்.

17. பின்வருவோர், அறிவியல், தொழினுட்பக்குழு என அறியப்படும் முகவர் நிலையத்தின் நிலையியற் குழுவொன்றாக அமைதல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) :— அறிவியல் தொழினுட்பக் குழு.

(அ) பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஆ) பதின்மூன்றும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவை உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) பதின்மூன்றும் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) தொடக்கம் (ix) வரையிலான உட்பந்திகளின்கீழ் பதவி வகிக்கும் பேரவையின் பதவிவழி உறுப்பினர்கள்.

18. பின்வருவன குழுவின் கடமைகளாதல் வேண்டும் :— குழுவின் கடமைகள்.

(அ) ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதும் மதிப்பிடுதலும், முகவர் நிலையத்தின் ஆண்டு வேலை நிகழ்ச்சித் திட்டத்திலும் வரவுசெலவுத் திட்டத்திலும் சபைக்கு விதப்புரைகளைச் செய்தலும்;

(ஆ) அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதும், அறிக்கைகளை மதிப்பிடுதலும், அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்டு உணர்தலும், அத்தகைய செயற்றிட்டங்கள் பற்றிச் சபைக்கு விதப்புரைகள் செய்தலும்; அத்துடன்

(இ) விடயத்திற்கு ஏற்றவாறு, சபை அல்லது பேரவை, அதற்கு ஆற்றுப்படுத்தக்கூடிய அத்தகைய அறிவியல் அல்லது தொழினுட்ப விடயங்கள்மீது ஆலோசனை வழங்குதல்.

19. (1) பணிப்பாளர் தலைமையதிபதி, இரண்டு மாதங்களில் ஆகக் குறைந்தது ஒருமுறையாவது குழுவின் கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும். குழுவின் நடவடிக்கைகள் முதலியன.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, ஒவ்வோர் உறுப்பினருக்கும் அத்தகைய கூட்டத்திற்கு முன்பு எழுத்தில் ஆகக் குறைந்தது ஏழு நாள் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(3) குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்ட நடப்பெண் எட்டு உறுப்பினர்கள் ஆதல் வேண்டும்.

(4) குழுவின் எல்லா முடிபுகளும், இயலுமானவரை கருத்து ஒருமைப்பாட்டுடன் எடுக்கப்படல் வேண்டும்.

(5) குழுவின் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளும் குறிப்பேடொன்றில் பதியப்படுதல் வேண்டும். அத்தகைய கூட்டக்குறிப்பு, குழுவின் அடுத்த கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இதனகத்துள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக, குழு அதன் சொந்த நடவடிக்கைமுறையைத் தீர்மானிக்கலாம்.

சபையினதும் பேரவையினதும் உறுப்பினர்களின் ஊதியம்.

20. சபையினதும் பேரவையினதும் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும், ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.

சபையின் அல்லது பேரவையின் நியமன உறுப்பினர்களைப் பதவியிலிருந்து விலக்குதல்.

21. சபையின் எவரேனும் நியமன உறுப்பினர் அல்லது 13 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட பேரவையின் உறுப்பினர், விடயத்திற்கேற்றவாறு, சபையின் அல்லது பேரவையின் ஏனைய உறுப்பினர்களின் பெரும்பான்மை அபிப்பிராயப்படி, அவருடைய துர்நடத்தை அல்லது இயலாமை அல்லது திறமையின்மை காரணமாக, இச்சட்டத்தின்கீழ் அவருடைய கடமைகளைப் புரிவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்படுமிடத்து, அமைச்சரானவர், விடயத்திற்கேற்றவாறு, சபையின் அல்லது பேரவையின் அத்தகைய ஏனைய உறுப்பினர்களது விதப்புரையின்மீது, அத்தகைய உறுப்பினரைப் பதவியிலிருந்து விலக்கலாம்.

சபை அல்லது பேரவை உறுப்பினர்களினால் அக்கறை வெளிவிடப்படுதல்.

22. சபையினால் செய்யப்படும் அல்லது செய்யப்பட உத்தேசிக்கப்படும் ஏதேனும் செயற்றிட்டத்தில், பொறுப்பு முயற்சியில் அல்லது ஒப்பந்தத்தில் நிதிசார் அல்லது வேறுவகையான அக்கறை எதனையும் நேரடியாக அல்லது மறைமுகமாகக் கொண்டுள்ள சபையின் அல்லது பேரவையின் உறுப்பினரொருவர், விடயத்திற்கேற்றவாறு, சபையின் அல்லது பேரவையின் கூட்டமொன்றில் எவ்வளவு முன்னதாக இயலுமோ அவ்வளவு முந்திய சந்தர்ப்பத்தில் அவருக்குள்ள அக்கறையின் தன்மையை வெளிவிடுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய வெளிவிடுகை, விடயத்திற்கேற்றவாறு, சபையின் அல்லது பேரவையின் கூட்டக் குறிப்பில் பதியப்படுதல் வேண்டும்; அத்துடன் சபை அல்லது பேரவை வேறு விதமாகப் பணித்தாலன்றி, செயற்றிட்டம், பொறுப்புமுயற்சி அல்லது ஒப்பந்தம் தொடர்பான ஏதேனும் கலந்தாய்வில் அல்லது முடிவில் அந்த உறுப்பினர் அதன் பின்னர் பங்குபற்றுதலாகாது.

23. உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் இருக்கிறது அல்லது அதன் உறுப்பினர்களுள் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தால் மட்டும், சபையின் அல்லது போவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாதல் ஆகாது.

**உறுப்பினர்களிடையே வெற்றிடம் இருப்பது காரணமாக சபையின் அல்லது போவையின் செயல் அல்லது நடவடிக்கை செல்லுபடியற்றதாகாது.**

24. (1) சபையின் வேண்டுகோளின் பேரில், எவரேனும் பகிரங்க அலுவலர், அந்த அலுவலரினதும், அந்த அலுவலர் தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது சேர்ந்துள்ள அமைச்சுக்கான செயலாளரினதும் சம்மதத்துடன், அதே சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்கு தற்காலிகமாக முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கப்படலாம் அல்லது அத்தகைய பணியாட்டொகுதிக்கு அதே போன்ற சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

**முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.**

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர், அந்த உட்பிரிவின்கீழ் முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ளவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர் அவ்வுட்பிரிவின்கீழ் முகவர் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அவருக்கும், அவர் தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

25. முகவர் நிலையம், இலஞ்சச் சட்டத்தின் கருத்திற்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

**முகவர் நிலையம், இலஞ்சச்சட்டத்தின் கருத்திற்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.**

26. சபையானது முகவர் நிலையத்திற்கான ஆலோசகர்களாக அல்லது உசாவுநர்களாக இருப்பதற்கென அல்லது ஆலோசகர்களாக அல்லது உசாவுநர்களாகச் செயலாற்றுவதற்கென அமைச்சரின் முன்னனுமதியுடன் ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது அதன் ஏதேனும் கிளையின் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு எவரேனும் ஆளின் உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்; அத்துடன், அமைச்சரினதும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினதும் ஒருப்பாட்டுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஊதியத்தை வழங்கலாம்.

**ஆலோசகர்கள்.**

அமைச்சருக்குத் தகவல் கொடுத்துதவுதல்.

27. சபையானது, முகவர் நிலையத்தின் நடவடிக்கைகள் மற்றும் அதன் நிதி நிலைமை என்பன தொடர்பாக அமைச்சர் காலத்துக்குக் காலம் கோரக்கூடிய அத்தகைய தகவலை அமைச்சருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறுயினும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களம் அல்லது அதன் கிளை தவிர்ந்த எவரேனும் திறத்தவருடனுன ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் அந்தரங்கமானது எனக் கொள்ளுவதற்கு சபை கட்டுப்பட்டுள்ள கருமங்கள் தொடர்பிலான எந்தத் தகவலாவது, இப்பிரிவின்கீழ் வெளிவிடப்படுதலாகாது.

சபைக்கான அமைச்சரின் பணிப்புரைகள்.

28. அமைச்சரானவர், சபையின் எழுத்திலான அவதானிப்புகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், தேசிய அக்கறையுள்ள கருமங்கள் தொடர்பாக அதன் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான பொதுவான அல்லது சிறப்பான பணிப்புரைகளைச் சபைக்கு எழுத்தில் வழங்கலாம் என்பதோடு, சபை, அத்தகைய பணிப்புரைகளுக்குப் பயன் கொடுத்தலும் வேண்டும்.

முகவர் நிலையத்தின் நிதியம்.

29. (1) முகவர் நிலையம், அதன் சொந்த நிதியத்தை வைத்திருத்தல் வேண்டுமென்பதோடு, அதனைப் பேணுதலும் வேண்டும்.

(2) பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) முகவர் நிலையத்தின் பயன்பாட்டுக்கெனப் பாராளுமன்றத்தினுல் காலத்திற்குக் காலம் ஒதுக்கப்படக்கூடிய எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஆ) அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிகையிலும், நிறைவேற்றுவதிலும் முகவர் நிலையத்தினுல் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(இ) உள்ளூர் மூலத்திலிருந்தாயினுஞ்சரி, அல்லது வெளியூர் மூலத்திலிருந்தாயினும் சரி எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகள்மூலம், கொடைகள்மூலம் அல்லது அன்பளிப்புகள்மூலம் அமைச்சரின் அங்கீகாரத்துடன், முகவர் நிலையத்தினுல் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய எல்லாப் பணத் தொகைகளும்.

(3) அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் முகவர் நிலையத்தினுல் உறப்படும் ஏதேனுஞ் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும் முகவர் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் பணங்களை மீளப்பெறுதலும் முதலீடு செய்தலும்.

30. நிதியத்திலிருந்து எவையேனும் பணத்தொகைகளை மீளப்பெறும் அத்துடன், நிதியத்தின் எவையேனும் பணங்களை முதலீடுசெய்யும் விதமும் முறையும், அந்த நோக்கத்திற்கெனக் காலத்திற்குக் காலம் ஆக்கப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க, சபையினுல் செய்யப்படுதல் வேண்டும்.

31. (1) (அ) முகவர் நிலையத்தினது வருமானத்தின் அல்லது இலாபங்களின் அல்லது வேறு வரவுகளின்மீதான ஏதேனும் வரி, அத்துடன்

(ஆ) முகவர் நிலையத்தினால் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் சாதனத்தின்மீதான ஏதேனும் முத்திரைத் தீர்வை,

என்பனவற்றைக் கொடுப்பதிலிருந்து முகவர் நிலையம் விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

முகவர் நிலையம் வரி முதலியவற்றைக் கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படுதல்.

(2) எவையேனும் பண்டங்களின் நன்கொடை அல்லது இறக்குமதி அல்லது கொள்வனவு முகவர் நிலையத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கு உகந்ததெனக் கருதப்பட்டால், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன், அமைச்சர், முகவர் நிலையத்திற்கு நன்கொடையளிக்கப்பட்ட அல்லது முகவர் நிலையத்தினால் அதன் நிதியத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின்மீது ஏதேனும் சுங்க அல்லது இறைத்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து முகவர் நிலையத்திற்கு விலக்களிக்கலாம்.

(3) முகவர் நிலையத்திற்கும் வேறு எவரேனும் திறத்தவருக்கும் இடையில் ஏதேனும் உடன்படிக்கையைக் கொண்டுள்ளதும், முகவர் நிலையத்தினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்படவிருக்கும் சேவைகளுக்காக அல்லது முகவர் நிலையத்தின் வேலைக்கு ஆதாரவாக முகவர் நிலையத்திற்கு கொடுப்பனவு செய்யப்படுவதற்கு ஏற்பாடு செய்கின்றதுமான ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், முகவர் நிலையம் அத்தகைய வேறு திறத்தவர் ஆகிய இருவரும், அத்தகைய சாதனத்தின்மீது முத்திரைத்தீர்வை எதுவும் கொடுப்பதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஆற்றப்பட்ட சேவைகளுக்காக அல்லது முகவர் நிலையத்தின் பொது ஆதரவிற்கு உதவு தொகையொன்றாக முகவர் நிலையத்திற்குக் கொடுப்பனவொன்றைச் செய்யும் எவரேனுமாள், வருமான வரிப் பொறுப்பைக் கணிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய கொடுப்பனவு உண்மையாகச் செலுத்தப்பட்ட ஆண்டின் வருமானத்திலிருந்து கழிப்பனவொன்றாக அத்தகைய கொடுப்பனவுத் தொகையைக் கோரலாம்.

32. (1) முகவர் நிலையத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

முகவர் நிலையத்தின் நிதியாண்டும் கணக்குகளைக் கணக்காய்வு செய்தலும்.

(2) சபை, முகவர் நிலையத்தின் வரவு, செலவு, சொத்துக்கள், பொறுப்புகள், மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தொடர்பில் முறையான கணக்கேடுகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகள் தொடர்பிலான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் முகவர் நிலையத்தினது கணக்குகளின் கணக்காய்வுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

33. (1) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட நீர்வாழ் உற்பத்திப் பொருள்கள் தொடர்பாக, பாராளுமன்றத்தின் தீர்மானம் மூலம் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தொகையிலான ஏற்றுமதித்தீர்வை விதிக்கப்பட்டு, அறவிடப்பட்டுச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிதியத்திற்கு வருமானம் ஏற்பாடு செய்யுமு் விடயங்களில் சிறப்பு ஏற்றுமதித் தீர்வை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் செய்யப்படும் ஏதேனும் தீர்மானம் அதை யொத்த தீர்மானம் மூலம் எந்த நேரத்திலாவது மாற்றப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(3) இப்பிரிவானது, சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பாகமாக அமைந் தாற்போன்று பயனுடையதாதல் வேண்டுமென்பதோடு, அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்:

ஆயின், இச்சட்டத்தினால் விதிக்கப்படும் ஏற்றுமதித் தீர்வை, அக்கட் டளைச்சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதே னும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் ஏற்று மதித் தீர்வைக்கு மேலதிகமாக இருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தினால் விதிக்கப்படும் ஏற்றுமதித்தீர்வை வருவாய்கள், முதன்மைச் சுங்கச் சேகரிப்பாளரினால் முகவர் நிலையத்திற்கு மாதந் தோறும் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, முகவர் நிலைய நிதியத் தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

பதிவேடுகள்.

34. பணிப்பாளர் தலைமையதிபதி, முகவர் நிலையத்தின் அலுவலர்களி னால் கொண்டுநடாத்தப்பட்ட ஆராய்ச்சிகள், ஆய்வுகள், சோதனைகள், பரிசோதனைகள், வேறு புலனாய்வுகள் என்பனவற்றினதும் அவர்களினால் செய்யப்பட்ட கண்டுபிடிப்புகள் அல்லது புத்தாக்கங்கள் என்பனவற்றின தும் விவரங்களைக் கொண்டுள்ள பதிவேடுகளைப் பேணுவித்தல் வேண்டும்.

அசைவுள்ள, அசைவற்ற அரச ஆதனம் முகவர் நிலையத்திற்குக் கிடைக்கக்கூடியதாகச் செய்வித்தல்.

35 அமைச்சரானவர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், முக வர் நிலையத்தின் நோக்கங்களுக்காக அரசின் அசைவுள்ள அல்லது அசை வற்ற ஏதேனும் ஆதனத்தின் உடைமைகளையும் பயன்பாட்டையும் முகவர் நிலையத்திற்குக் கைமாற்றலாம்; அத்துடன், அதற்கு உரித்தாக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அரசின் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பாதிக்கும் கட்டளை எதுவும், காணிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப் பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாடில்லாமல், இப்பிரிவின் முற்போந்த ஏற் பாடுகளின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது:

ஆயின், மேலும், அரசின் அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தைப் பாதிக் கும் கட்டளை எதுவும், அத்தகைய ஆதனத்தின்மீது கட்டுப்பாட்டை யுடைய அமைச்சரின் ஒருப்பாடில்லாமல் இப்பிரிவின் முற்போந்த ஏற் பாடுகளின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படுதலாகாது.

குறித்த சில ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களை முகவர் நிலையத்துக்குக் கைமாற்றுதல்.

36. நியமிக்கப்பட்ட தேதியின் பின்னர் இயலக்கூடியளவு விரைவாக, அமைச்சரின் கீழுள்ள ஏதேனும் பிரிவினால் அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் அல்லது முகவர் நிலையத்திற்கு கைமாற்றப்பட வேண்டுமென அமைச்சரினால் கட்டளையிடப்படக்கூடியதான அத்தகைய பிரிவுக்காக அல்லது கூட்டுத்தாபனத்திற்காக அல்லது பிரிவின் அல்லது கூட்டுத்தாபனத்தின் சார்பில் வேறு எவரேனும் ஆளினால் மேற்கொள்ளப் படும் ஆராய்ச்சித்திட்டங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனை யும் நெறிப்படுத்துவதற்கான, ஆதரித்தற்கான அத்துடன் தொடருவதற் கான பொறுப்பை முகவர் நிலையம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

37. (1) அசைவற்ற ஏதேனும் ஆதனம் முகவர் நிலையத்தின் ஏதேனும் நோக்கத்திற்குத் தேவைப்பட்டு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் உத்தேசிக்கப்பட்ட கொள்ளலை அமைச்சர், அங்கிகரிக்குமிடத்து, அந்த ஆதனம் பகிரங்க நோக்கமொன்றிற்குத் தேவைப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதோடு, காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அதற்கிணங்க கொள்ளப்பட்டு, முகவர் நிலையத்திற்கு மாற்றப்படுதலும் வேண்டும். காணி கொள்ளுதற் சட்டத்தின் கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.

(2) முகவர் நிலையத்திற்காக, காணி கொள்ளுதற் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளுதற்காகச் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகை, முகவர் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

38. (1) எந்த வழக்காவது அல்லது குற்றவழக்காவது— இச்சட்டத்தின் கீழ் அல்லது முகவர் நிலையத்தினது பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கான பாதுகாப்பு.

(அ) இச்சட்டத்தின்கீழ் முகவர் நிலையத்தினால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக முகவர் நிலையத்திற்கு எதிராக ; அல்லது

(ஆ) முகவர் நிலையத்தினது பணிப்பின்மீது இச்சட்டத்தின்கீழ் அவரினால் நன்னோக்கத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக முகவர் நிலையத்தின் எவரேனும் உறுப்பினருக்கு, அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக,

தொடரப்படுதலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் முகவர் நிலையத்தினால் அல்லது அதற்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்கில் உறப்படும் ஏதேனும் செலவினம், முகவர் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் ஏதேனும் அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்கில் முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்பட்ட, அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுதொகைகள், முகவர் நிலையத்தின் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது முகவர் நிலையத்தினது பணிப்பின்மீது ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஆளினால் செய்யப்பட்ட அல்லது அவரினால் செய்யப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது குற்றவழக்குத் தொடருதலில், அவரினால் உறப்பட்ட ஏதேனும் செலவினம், நீதிமன்றம் அத்தகைய செயல் நன்னோக்கத்துடன் செய்யப்பட்டதாகக் கருதினால், அத்தகைய வழக்கில் அல்லது குற்றவழக்குத் தொடருதலில் அத்தகைய செலவினம் அவரினால் அறவிடப்பட்டாலன்றி, முகவர் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் வேறு எவரேனும் தொழில் தருநரிடம் சேவையில் ஈடுபடுதலாகாது.

39. பணிப்பாளர் தலைமையதிபதியினதும் சபையினதும் எழுத்திலான முன்னனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், முகவர் நிலையத்தின் அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் வேறு எவரேனும் தொழில்தருநரிடம் ஏதேனும் பணம் பெறும் சேவையில் ஈடுபடுதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

40. (1) அமைச்சரானவர், இச்சட்டத்தின்கீழ் எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பிலும் சபையின் ஆலோசனையுடன் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதோடு, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது வெளியிடப்பட்ட தேதியின் பின்னர் வசதியாகக் கூடியளவுவிரைவாக, அங்கீகரிக்கப்படுவதற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

விதிகள்.

41. (1) இச்சட்டத்தின்மூலம் எக்கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அக்கருமங்கள் எல்லாம் தொடர்பில் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்று தொடர்பில் சபை விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினால் ஆக்கப்பட்ட விதியொன்று, அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும்வரையும் அத்துடன் அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படும் வரையும், பயனுடைத்தாதலாகாது.

பொருள் கோடல்.

42. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"நீர்வாழ் உற்பத்திப் பொருள்" என்பது, இலங்கையினுள் அல்லது அதற்கு வெளியே நீரில் அல்லது நீருக்கு அடியில் எடுக்கப்படும் பதனிடப்பட்ட அல்லது பதனிடப்படாத ஏதேனும் நீர்வாழ் வளப்பொருள் அல்லது பதார்த்தம் என்று பொருள்படும்;

"நீர்வாழ் வளங்கள்" என்பது, நீரிலுள்ள அல்லது நீருக்கு அடியிலுள்ள உயிர்வாழ், மற்றும் உயிர்வாழாத வளங்கள் என்று பொருள்படும்;

"இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம்" என்பது, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்;

"இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம்" என்பது, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம் என்று பொருள்படும்;

"கரையோர ஈர நிலங்கள்" என்பது, கரையோர கழிமுகங்கள், கடற்கழிகள், சதுப்பு நிலங்கள் உட்பட கடல்நீர், கரையோர நன்னீர், சதுப்புத் தாழ் நிலங்கள், சேற்று நிலங்கள் என்று பொருள்படும்;

"உண்ணாட்டு நீர்ப்பரப்பு" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கரையோர வலயச் சட்டத்தின்கீழ் ஏற்புடையதாகக் கூடிய அடிமூல வரைகளுக்கு நிலப்புறமாக இருக்கும் நீர்ப்பரப்பு யாவும் என்று பொருள்படும்;

"தேசிய நீர்வாழ் வளங்கள்" என்பது, இலங்கையின் இறைமை, நியாயாதிக்கம் அல்லது கட்டுப்பாட்டிற்கு அமைந்த நீரிலுள்ள அல்லது நீருக்கு அடியிலுள்ள எல்லா உயிர்வாழ், மற்றும் உயிர்வாழாத வளங்கள் என்று பொருள்படும்;

"கரையிலிருந்து விலகிய இடப்பரப்புகள்" என்பது, 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கரையோர வலயச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, இலங்கையின் இறைமை, நியாயாதிக்கம் அல்லது கட்டுப்பாட்டிற்கு அமைந்த அத்தகைய எல்லா இடப்பரப்புகளும் என்று பொருள்படும்;

"பகிரங்கக் கூட்டுத்தாபனம்" என்பது, கொடைமூலம், கடன்மூலம் அல்லது வேறு விதமாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியங்களைக்கொண்டு அல்லது மூலதனத்தைக்கொண்டு, கம்பனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த, எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்.